| | | | சாக்ரமெண்டோ தமிழ் மன்றம்<br>திருக்குறள் போட்டி 2021<br>குழு 1 (வயது 6 மற்றும் கீழே) | |
|---|---|---|---|---|
| எண் | குறள் எண் | அதிகாரம் | குறள் | குறள் விளக்கம் |
| 1 | 2 | கடவுள் வாழ்த்து | கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்<br>நற்றாள் தொழாஅர் எனின் | தூய அறிவு வடிவானவனின் திருவடிகளை வணங்காதவர், படித்ததனால் பெற்ற பயன்தான் என்ன? |
| 2 | 14 | வான்சிறப்பு | ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்<br>வாரி வளங்குன்றிக் கால் | மழை என்னும் வருவாய் வளம் குன்றி விட்டால், ( உணவுப் பொருள்களை உண்டாக்கும்) உழவரும் ஏர் கொண்டு உழமாட்டார் |
| 3 | 50 | இல்வாழ்க்கை | வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்<br>தெய்வத்துள் வைக்கப் படும் | உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கிறவன், வானுலகத்தில் உள்ள தெய்வ முறையில் வைத்து மதிக்கப்படுவான். |
| 4 | 69 | மக்கட்பேறு | ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்<br>சான்றோன் எனக்கேட்ட தாய் | தன் மகனை நற்பண்பு நிறைந்தவன் என பிறர் சொல்லக் கேள்வியுற்ற தாய், தான் அவனை பெற்றக் காலத்தில் உற்ற மகிழ்ச்சியை விடப் பெரிதும் மகிழ்வாள். |
| 5 | 98 | இனியவை கூறல் | சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்<br>இம்மையும் இன்பம் தரும் | பிறர்க்கு மனத்துன்பம் தராத இனிய சொல் ஒருவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் இன்பம் தரும். |
| 6 | 110 | செய்ந்நன்றியறிதல் | எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை<br>செய்ந்நன்றி கொன்ற மகற்கு | எந்த அறத்தை மறந்தார்க்கும் வாழ்வு உண்டு; ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தார்க்கு வாழ்வில்லை |
| 7 | 291 | வாய்மை | வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்<br>தீமை யிலாத சொலல் | உண்மை என்று சொல்லப்படுவது எது என்றால், எவர்க்கும் எத்தகைய தீங்கையும் தராத சொற்களைச் சொல்வதே ஆகும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | 314 | இன்னா செய்யாமை | இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயஞ் செய்து விடல் | இன்னா செய்தவரைத் தண்டித்தல் அவரே நாணும் படியாக அவருக்கு நல்லுதவி செய்து அவருடைய தீமையையும் நன்மையையும் மறந்து விடுதலாகும். |
| 9 | 392 | கல்வி | எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டுங் கண்ணென்ப வாழும் உயிர்க்கு | வாழும் நல்லவர்க்கு அறிவியலும் கலைஇயலும் சிறந்த கண் என்று அறிந்தவர் கூறுவர். |
| 10 | 722 | அவை அஞ்சாமை | கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன் கற்ற செலச்சொல்லு வார் | கற்றவரின் முன் தாம் கற்றவைகளைச் அவருடைய மனதில் பதியுமாறுச் சொல்லவல்லவர், கற்றவர் எல்லாரிலும் கற்றவராக மதித்துச் சொல்லப்படுவார். |